<u>குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்.</u>

முன்னிலை : திருமதி. என். ஷர்மிளா, B.A.,B.L.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

2016 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 11-ஆம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2046, மன்மத வருடம், பங்குனி 29 ஆம் நாள்

<u>ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். **75/2014**</u>

காவல் ஆய்வாளர்,
அனைத்து மகளிர் காவல் நிலையம் துடியலூர்,
கோயம்புத்தூர்.
(குற்ற எண்.21/12) ... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

சரவணன் (31) த/பெ. சீனிவாசன் ... எதிரி

இவ்வழக்கானது இறுதி விசாரணைக்காக இன்று 11.04.2016 இந்நீதிமன்றத்தின் முன் வரப் பெற்று, அரசுத்தரப்பில் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திரு.சு.சிவக்குமார் எம்.எஸ்சி.,எம்.எல்., அவர்களும், எதிரி தரப்பில் திரு. என்.சிவாஞானம், எம்.ஏ.,பி.எல்., அவர்களும் முன்னிலையாகி எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களைப் பரிசீலித்தும் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்

<u>தீர்ப்புரை</u>

WEB COPY

1. இந்த வழக்கானது காவல்துறையினர் எதிரிமீது இதச பிரிவுகள் 417, 506(i)-ன் கீழ் குற்றம் புரிந்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த வழக்கின் வாதி மாலா என்கிற மாரிகண்ணு 5-ம் வகுப்புவரை படித்துவிட்டு மேற் கொண்டு படிக்க இயலாத காரணத்தினால் தனது பெற்றோர் வீட்டில் இருந்துகொண்டு மதுரா சில்க்ஸில் வேலை பார்த்து வரும்போது அவரது தூரத்து உறவினரான எதிரியாகிய நீர் சாய்பாபா காலணியில் வேலை செய்து வந்தநீர் வாதியிடம் பழகி வாதியை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைகள் கூறி வந்ததால் வாதியும் கடந்த 2006-ல் எதிரி வாதியிடம் வாதியை பார்க்க வேண்டுமென்றும் உடனே தன்னை சிவகங்கைக்கு வரும்படி கூறியபோது வாதி மறுக்கவே எதிரி தற்கொலை செய்துவிடுவதாக கூறியதால் பயந்து போய் எதிரியின் சொந்த ஊருக்கு கிளம்பி சென்றதாகவும், பின் வாதியை சிவகங்கையில் அவர் தங்கியிருந்த அறைக்கு அழைத்துச்சென்று வாதியிடம் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி வாதியை நம்பவைத்து இருவரும் உடலுறவு கொண்டுள்ளதாகவும், அதன்பின் அடிக்கடி எதிரி வாதியின் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் வாதியின் வீட்டுக்கு வந்து உடலுறவு கொண்டுள்ளதாகவும், அதன்பின் எதிரி வீட்டில் பார்க்கும் பெண்ணைத் தான் திருமணம் செய்து கொள்ள போவதாகவும் வாதியை திருமணம் செய்துகொள்ள முடியாது என்றும் கூறியதாகவும், பின்பு கடந்த 02.07.2012-ம் தேதி வாதியும் அவரது குடும்பத்தாரும் சிவகங்கையில் எதிரியிடம் சென்று வாதியை திருமணம்செய்து கொள்ள கேட்டபோது மறுத்தும் சம்பவம் பற்றி வெளியே சொன்னால் கொன்று விடுவதாக மிரட்டியதாகவும், எதிரியின்மீது இதசபிரிவுகள் 417, 506(i)-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அவருக்கு அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207-ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்பு வழக்காவணங்களை பரிசீலித்து எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றத்தை புரிந்திருக்கலாம் என அனுமானிக்க போதுமான காரணங்கள் இருந்ததன் பேரில் எதிரிமீது 417, 506(i)-ன்கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ, எதிரி தான் குற்றவாளி அல்ல என்றார். எனவே அரசுத்தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசுத்தரப்பில் 3 சாட்சிகளும் 2 சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டன.

<u>**5.** அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணையின் சுருக்கம் பின்வருமாறு **:**</u>

அசா.1 வாதி மாலா (எ) மாரிகண்ணு தனது சாட்சியத்தில் தான் கவுண்டம் பாளையத்தில் குடியிருந்து துணிக்கடையில் வேலைசெய்து வருவதாகவும், எதிரி தனக்கு உறவினர் என்றும், தான் துணிக்கடையில் வேலை செய்யும்போது எதிரி உறவினர் என்பதால் தங்களுடைய கடைக்கு வருவதாகவும், தங்களுக்குள் சிறு சிறு பிரச்சனைகள் இருந்து வந்ததால் எதிரிமீது இருந்த கோபத்தில் தவறுதலாக புகார் கொடுத்து விட்டதாகவும், புகாரிலுள்ள சங்கதிகளில் எதிரி தன்னை ஏமாற்றவில்லை என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் தன்னால் கொடுக்கப்பட்டது என்றும், அது அ.த.சா.ஆ.1 என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துவிட்டு நீதிமன்ற விசாரணையின் போது அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்.

6. அசா.2 மீனா தனது சாட்சியத்தில் தான் தற்போது கவுண்டம்பாளையத்தில் குடியிருந்து பூ வியாபாரம் செய்து வருவதாகவும், அசா.1 தனது மகள் என்றும், எதிரி தங்களின் உறவினர் என்றும், அசா.1 க்கும் எதிரிக்கும் இடையே என்ன நடந்தது என்று தனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துவிட்டு நீதிமன்ற விசாரணையின்போது அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக மாறியுள்ளார்.

7. அசா.3 அமுதா தனது சாட்சியத்தில் தான் தற்போது துடியலூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், ஏற்கனவே காவல்நிலையத்தில் பணியிலிருந்த ஆய்வாளர் திருமதி. சாந்தா அவர்கள் 14.07.2015-ம் தேதி ஆய்விலிருந்தபோது 20.30 மணிக்கு மாலா என்கிற மாரிக்கண்ணு கொடுத்த எழுத்து மூலமான புகாரைப்பெற்று நிலைய கு.எண்.21/12 ச/பி. 417, 506(1) இதசவில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாகவும், அது அ.த.சா.ஆ.2 என்றும், பின்பு முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகாரையும் இணைத்து கனம் குற்றவியல் நீதிமன்ற எண்.1-க்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், பின் அன்றையதினம் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின் வழக்கின் எதிரிகள் சென்னை உயர்நீதி மன்றத்தில் முன்ஜாமீன் கேட்டு தாக்கல் செய்ததன்பேரில் ஜே.எம்.1-ல் ஆஜராகி ஜாமீனில் சென்றுள்ளதாகவும், பின் ஆய்வாளர் சாந்தா வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணையும் எதிரியையும் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பியதாகவும், 22.12.2013-ம் தேதி மருத்துவ பரிசோதனை அறிக்கையைப் பெற்று அன்றையதினம் டாக்டர். ரகுராமையா மற்றும் நல்லி சந்திரிகா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், வழக்கின் விசாரணை முடித்து 22.12.2013-ம் தேதி எதிரிமீது இதச பிரிவுகள் 417,506(i)-ன்கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

8. அரசுத்தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து குவிமுச பிரிவு 313(1)(ஆ) படி வனைந்து வினவியபொழுது எதிரி அந்த சாட்சியங்கள் பொய் என்றும் பொய்யான வழக்கு என்றும் தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் எடுத்துரைத்தார்.

9. இவ்வழக்கினில் முடிவு செய்யப்பட வேண்டிய சங்கதி யாதெனில், அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினை நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா? என்பதேயாகும்.

**10.** <u>கலந்தாராய்தல் மற்றும் தீர்வு</u> ;

அரசுத் தரப்பில் எதிரிமீது இதச பிரிவுகள் 417, 506(i ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக இந்த வழக்கு பதியப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதியிடம் எதிரி திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தைகள் கூறி வந்ததால் வாதியும் எதிரியை கடந்த 2006 முதல் 6 வருடங்களாக இருவரும் விரும்பி வந்துள்ளதாகவும், 2006-ல் எதிரி வாதியிடம் வாதியை பார்க்க வேண்டுமென்றும் உடனே வாதியை அவரது சொந்த ஊரான சிவகங்கைக்கு கிளம்பி வரும்படி கட்டாயப்படுத்தியதாகவும், அதற்கு வாதி மறுக்கவே எதிரி தற்கொலை செய்துவிடுவதாக கூறியதால் பயந்து போய் எதிரியை பார்க்க வாதி எதிரியின் சொந்த ஊருக்கு கிளம்பிச் சென்றதாகவும், எதிரி சிவகங்கையில் அவர் தங்கியிருந்த அறைக்கு அழைத்துச்சென்று வாதியிடம் திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி ஏமாற்றி வாதியை நம்பவைத்து உடலுறவு கொள்ள வைத்ததால் வாதியும் நம்பி எதிரியுடன் உடலுறவு

வைத்துக்கொள்ள சம்மதித்து அன்று இருவரும் உடலுறவு கொண்டுள்ளதாகவும், அதன் பின்பு அடிக்கடி எதிரி வாதியின் வீட்டில்யாரும் இல்லாத நேரத்தில் வாதியின் வீட்டுக்கு வந்துஇருவரும் உடலுறவு கொண்டுள்ளதாகவும், அதன்பின்பு எதிரியானவர் வீட்டில் பார்க்கும் பெண்ணைத் தான் திருமணம் செய்து கொள்ளப்போவதாகவும் வாதியை திருமணம் செய்துகொள்ள முடியாதுஎன்றும் கூறியுள்ளதாகவும், திருமணம்செய்து கொள்ள கேட்டபோது மறுத்தும் சம்பவம் பற்றி வெளியே சொன்னால் கொன்று விடுவேன் என்று 02.07.2012-ம் தேதி மிரட்டியதாகவும் அரசுத்தரப்பில் எதிரிமீது வழக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. அரசுத்தரப்பில் அரசுத்தரப்பு வழக்கினை மெய்ப்பிக்க 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு 2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

11. இந்த வழக்கில் பாதிக்கப்பட்டதாக கூறப்படும் புகார்தாரர் அசா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அசா.1 புகாரில் எதிரி தன்னை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி உடலுறவு வைத்துக்கொண்ட பின்பு திருமணம் செய்துகொள்ள மறுத்து சப்வத்தை வெளியே சொன்னால் கொன்று விடுவேன் என்று மிரட்டியதாக கூறியிருந்தாலும் நீதிமன்றத்தில் ஆஜராகி அளித்துள்ள சாட்சியத்தில் எதிரி உறவினர் என்பதினாலும் தங்களுக்குள் சிறுசிறு பிரச்சனைகள் இருந்து வந்ததாகவும், அந்த பிரச்சனையின் காரணமாக எதிரியின்மீது இருந்த கோபத்தில் தவறுதலாக புகார் கொடுத்து விட்டதாகவும், புகாரில் உள்ள சங்கதிகளில் எதிரி தன்னை ஏமாற்றவில்லை என்று சாட்சியம் அளித்து அரசுத்தரப்பில் பிறழ் சாட்சி ஆக்கப்பட்டுள்ளார்.

12. பாதிக்கப்பட்டதாக கூறப்படும் அசா.1 யே புகாரில் சொல்லியுள்ளவாறு எதிரி தன்னை ஏமாற்றவில்லை என்று கூறும்போது உண்மையில் அரசுத்தரப்பில் எதிரிமீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டின்படி குற்றம் நிகழ்ந்துள்ளதா என்பது குறித்து சந்தேகம் எழுகிறது. ஏனெனில் புகார்தாரர் எதிரிக்கும் தனக்கும் இருந்து வந்த சிறுசிறு பிரச்சனைகள் காரணமாக புகார் கொடுத்து விட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே அசா.1ன் சாட்சியத்தினை வைத்து அரசுத்தரப்பில் எதிரிமீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு நடைபெற்றுள்ளதாக முடிவு செய்தல் இயலாது. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அசா.2 ம், அசா.1 க்கும் எதிரிக்கும் இடையே என்ன நடந்தது என்று தனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்து அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக்கப்பட்டுள்ளார். இவரது சாட்சியமும் அரசுத்தரப்பு குற்றச்சாட்டை எடுத்துரைக்கவில்லை. இவரது சாட்சியத்தின் மூலமும் அரசுத்தரப்பில் வழக்கு நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்வதற்கில்லை. அசா.1, அசா.2 சாட்சிகளைத் தவிர அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டு எஞ்சி நிற்பது புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியம் மட்டுமே. இவர் அசா.3 ஆக விசாரிக்கப்பட்டபோதும் இவர் வாயிலாகவும் அரசுத் தரப்பில் எதிரிமீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை.

13. எனவே மேற்கண்ட பரிசீலனைகளின்படி புகாரில் எதிரி வாதியை திருமணம் செய்து கொள்வதாக ஆசை வார்த்தை கூறி உடலுறவு வைத்துக் கொண்டபின்பு திருமணம் செய்து கொள்ள மறுத்து கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்லப்பட்டு இருந்தாலும் புகார்தாரர் நீதிமன்றத்தில் ஆஜராகி அளித்துள்ள சாட்சியத்தில் எதிரி தன்னை ஏமாற்றியதாகவோ, திருமணம் செய்து கொள்வதாகவோ, ஆசை வார்த்தை கூறியதாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ கூறவில்லை. மேலும் எதிரி அசா.1 யை திருமண ஆசைவார்த்தை கூறி ஏமாற்றியதாகவும், கொலை மிரட்டல் விடுத்ததாகவும், இந்த வழக்கில் அரசுத்தரப்பில் தகுந்த சாட்சியங்களின் மூலம் நிரூபிக்கப்படவில்லை. எனவே அரசுத்தரப்பில் எதிரிமீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து எதிரி குற்றமற்றவர் என்று முடிவு செய்கிறது.

14. எதிரியை இதச பிரிவுகள் 417, 506(i)-ன் கீழ் குற்றவாளி அல்ல என முடிவு செய்துள்ளதால் அவரை குவிமுச 248(1)ன் கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, 11.04.2016 அன்று அவையறியப் பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

WEB COPY

<u>இணைப்புகள்:</u>

<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:</u>

அசா.1 - மாலா (எ) மாரிகண்ணு (வாதி)
அ.சா.2 - மீனா
அசா.3 - அமுதா

<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:</u>

அ.த.சா.ஆ.1 . புகாரிலுள்ள அசா.1-ன் கையெழுத்து
அ.த.சா.ஆ.2 . முதல் தகவல் அறிக்கை

<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை.

<u>குறிப்பு :</u>

1. எதிரி சென்னை உயர்நீதிமன்ற முன் ஜாமீன் பெற்று இருந்தார்
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

WEB COPY